**செய்தி வெளியீடு எண்.502** **நாள்.9.8.2007**

**மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் தமிழகத்தின் முக்கியத் திருக்கோயில்களின் பணிமுன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம்– நாள் 9.8.2007.**

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் முக்கியத் திருக்கோயில்களின் திருப்பணி பணிகள் குறித்த முன்னேற்றங்கள், பல்வேறு கட்டுமானப் பணிகள், பக்தர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள், பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் நலனை முன்னிட்டு திருக்கோயில்கள் மூலம் நடைபெறும் பல்வேறு நலத்திட்டங்கள், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான நடவடிக்கைகள், திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், பல்வேறு நலத்திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஆலோசனைகள், திருக்கோயில் பணியாளர்கள் குறித்த விவரங்கள், திருக்கோயில் சார்பில் நடத்தப்பெறும் கல்வி நிறுவனங்கள், அர்ச்சகர் பயிற்சி பள்ளிகள், கருணை இல்லங்கள், ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பாக திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்கள் கலந்து கொள்ளும் சீராய்வுக் கூட்டம் 27.07.2007 முதல் நடைபெற்று வருகிறது.

இன்று 9.8.2007ல் நடைபெற்ற சீராய்வுக் கூட்டத்தில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மற்றும் கோவையில் உள்ள முக்கியத்திருக்கோயில்களான மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், ஆனைமலை அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயில் தொடர்பான திருப்பணிகள், நலத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், முக்கிய கட்டுமானப் பணிகள் மற்றும் திருக்கோயில்கள்

தொடர்பான இதரப்பணிகள் குறித்தானவைகளும் மற்றும் பழனியாண்டவர் திருக்கோயிலைச் சார்ந்த கல்லூரிகள் தொடர்பான சீராய்வுக் கூட்டம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையிலும், அரசுச் செயலர் திரு. து. இராசேந்திரன், சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி அவர்கள் முன்னிலையிலும், இந்து சமய அறநிலைய ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த சீராய்வுக் கூட்டத்தில், திருக்கோயில்களில் நடைபெற்று வரும் கட்டுமானப்பணிகள் மற்றும் திருப்பணிகள் விரைந்து முடித்திடவும், நலத்திட்டங்கள் மற்றும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்திடவும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுரை மற்றும் கருத்துரைகள் வழங்கப்பட்டது.

இச்சீராய்வுக் கூட்டத்தில் பழனி அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு எஸ்.வி. பாலசுப்பிரமணியம், மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர் திரு கார்த்தி சிதம்பரம், திரு பி. மோகன் கந்தசாமி, திரு அ. நாகராஜன், திருமதி இந்திரா ரவிச்சந்திரன், மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் திரு நல்லா. ஜி. பழனிச்சாமி, மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் திரு சி.ஆர். ரவிச்சந்திரன், திரு உடுமலை ஜெயான், பண்ணாரி அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. புருசோத்தமன், மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு டி. ராஜ்குமார், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர், கோவை

மண்டல இணை ஆணையர், தொடர்பு திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள், தலைமையிடத்து இணை ஆணையர்கள், கண்காணிப்புப் பொறியாளர், தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்), பழனியாண்டவர் திருக்கோயிலால் நடத்தப் பெறும் கல்லூரிகளின் முதல்வர்கள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை. சென்னை–9.